**10.6.2026**

பெயர் - கண்ணன்

**C.O.S. No.25/2023 (P.W - 1)**

விசாரணை தொடங்கும் நேரம்:- 11.35 AM

விசாணை முடியும் நேரம் :- 11.50 AM

**2** ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை **:-**

நான் எப்போதிலிருந்து வாதி வங்கியில் பணிபுரிகிறேன் என்றால் கடந்த வருடத்தில் இருந்துபணிபுரிகிறேன். இவ்வழக்கு குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்று சொன்னால் சரிதான். ஆவணங்கள் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். 2 ம் பிரதிவாதி ஆவணங்களில் கையொப்பம் செய்யும் போது நான் வங்கியில் இருந்தேனா என்றால் இல்லை. கடன் தொகை அனைத்தும் 1 ம் பிரதிவாதியின் வங்கி கணக்கிற்கு தான் அனுப்பிவைக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்குறை பத்தி 7 ல் கூறியுள்ளபடி அடமானம் வைக்கப்பட்ட பொருட்களை வங்கியின் பாதுகாப்பில் வைத்திருக்க வேண்டுமா என்றால் இல்லை. பொதுவாக அடமானம் வைக்கப்பட்ட பொருட்களை நாங்கள் பாதுகாக்க மாட்டேமா என்றால் பாதுகாக்க மாட்டோம் ஆனால் அவ்வாப்போது சென்று பொருட்கள் இருக்கிறதா என்று பார்வையிட்டு வருவோம். 1 ம் பிரதிவாதி அடமானம் வைத்த பொருட்களை அகற்றிவிட்டதாக நாங்கள் கூறியுள்ள நிலையில் அதுகுறித்து 2 ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பினோமா என்றால் ஆவணங்களை பார்த்துதான் கூற இயலும். அடமானம் வைக்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் அந்த இடத்தில் தான் உள்ளது என்றும் அதை நாங்கள் சென்று பார்வையிடவில்லை என்றும் உண்மையில் அடமானம் வைக்கப்பட்ட பொருட்கள் அங்கு இல்லாமல் இருந்திருந்தால் நாங்கள் 2 ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பியிருப்போம் என்று சொன்னால் சரியல்ல. அடமானம் வைக்கப்பட்ட பொருட்களின் மதிப்பினை கழித்த

பின்னரே மீதம் உள்ள தொகைக்கு 2 ம் பிரதிவாதி பொருப்பாவார் என்று சொன்னால் சரியல்ல மொத்த தொகைக்கும் இரண்டு பிரதிவாதிகளும் பொருப்பாவார்கள். அடமானம் வைத்த பொருட்களை வங்கி சென்று ஆய்வு மேற்கொள்ளும் பொறுப்பு உள்ளது என்று சொன்னால் சரிதான். 2 ம் பிரதிவாதி இந்தகடனில் இருந்த தன்னை விடுவிக்க வேண்டும் என்றும் பொறுப்புறுதியை திரும்ப பெற்றுக்கொள்வதாகவும் கூறி ஒரு மனுவினை எங்கள் வங்கிக்கு அனுப்பிவைத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். ஆனால், வங்கி கடன் முடியும் வரை அவ்வாறு அவரை பொறுப்பில் இருந்து விடுவிக்க இயலாது. நாங்கள் எங்களது பணியை சரி வர செய்யாமல் 2 ம் பிரதிவாதிக்கு எதிராக பொய்யாக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றும் அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.